/மின்னஞ்சலில்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை – 6.

ந.க.எண். 13845/அ3/இ1/2024, நாள். 14.10.2024

-----

பொருள்: பள்ளிக் கல்வி – தமிழ்நாடு பொதுப்பணி – கண்காணிப்பாளர் பதவியிலிருந்து நேர்முக உதவியாளர் பதவி உயர்வுக்கு 15-03-2024 அன்றுள்ளவாறு தகுதியுடைய கண்காணிப்பாளர்களின் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.707, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.03.07.1981.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் இதே எண். நாள். 24.07.2024 மற்றும் 19.09.2024.
3. சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

-----

பார்வை(2)ல் காணும்செயல்முறைகளின்படி கண்காணிப்பாளர் பதவியிலிருந்து நேர்முக உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த கண்காணிப்பாளர்களின் விவரங்கள் கோரப்பட்டது.

பார்வை (3)ன்படி சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் கண்காணிப்பாளர் பதவியிலிருந்து நேர்முக உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்தோர் பட்டியல் தயார் செய்யப்பட்டு, பார்வை(2)ல் காணும் 19.09.2024ம் நாளிட்ட செயல்முறைகளின்படி உத்தேச பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் பார்வை(3)ன்படி சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட மேல்முறையீடு கருத்துருவின்படி, சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த கண்காணிப்பாளர்கள் சார்பாக தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயார் செய்யப்பட்டு, இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

எனவே, இத்துடன் இணைத்து அனுப்பப்படும் நேர்முக உதவியாளர் பதவி உயர்வுக்கான கண்காணிப்பாளர்களின் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலினை தங்கள் ஆளுகைக்குட்பட்டஅனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்(இடைநிலைக்கல்வி / தொடக்கக்கல்வி / தனியார் பள்ளிகள்) ஆகிய அலுவலகங்களுக்கு தகவல் தெரிவிக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

த.பி.பா.....,

இச்செயல்முறைகள் பெறப்பட்டதற்கான ஒப்புதலை அ3 பிரிவு மின்னஞ்சல் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு: தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல்.**

14/10/24

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

14/10/24

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

(மின்னஞ்சல் மூலமாக),

நகல்:-

1. மாநில திட்ட இயக்குநர் , ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை – 6.
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை –6
4. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை 6.
5. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6
6. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை –6.

(1–6) தங்கள் அலுவலகப் பணியாளர்கள்சார்பான விவரம் அளிக்கும் பொருட்டு பணிந்தனுப்படுகிறது

7. இவ்வியக்கக அ2 பிரிவிற்கு
8. தகவல் பலகைக்கு

Padasalai.Net